
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஈழத்தமிழ் புதினங்களில் பெண் போராளிகள்

## *Female Fighters in Eelam Tamil Novels*

**கட்டுரையாளர்:** வேளாங்கன்னி.ஏ, ID: 0009-0005-4362-7158 , முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம் , அரசுக் கல்லூரி சித்தூர் , பாலக்காடு - 678001

**நெறியாளர்:** முனைவர் ரதி.ர, தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம் , அரசுக் கல்லூரி சித்தூர் பாலக்காடு - 678001

***Velankanni .Y,*** *Research Scholar, Dept of Tamil & Research centre, Govt. college chitter, Palakkad* 678001

*Research Supervisor:* ***Dr. Rathi.R****, Dept of Tamil & Research centre, Govt. college chitter, Palakkad* 678001

***Abstract;***

*Women's participation in political and social movements is a significant change in contemporary history. Especially during the Sri Lankan civil war when Tamil women engaged in armed struggle, which attracted globel attention. Novels such as Aayudha Ezhuthu, Bayangaravaathi, ummat, confirm that women were given a separate unit in the LTTE and that they directly participated in the war. Novels like this make the history of female fighters unique. This research article examines the emergence of female fighters, the reson for their role as fighters and the post-war situation.*

***Key words:*** *Female fighter, armed struggle, refugee, battle field, battle field suicide bomers (black tigers, auxiliary tasks*

**ஆய்வுச் சுருக்கம்:**

பெண்கள் அரசியல் மற்றும் சமூக இயக்கங்களில் பங்கேற்பது சமகால வரலாற்றில் முக்கியமான மாற்றம் ஆகும். குறிப்பாக இலங்கை உள்நாட்டுப் போரின் காலகட்டத்தில் தமிழ்ப்பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டது உலகளவில் கவனத்தை ஈர்த்தது. விடுதலைப் புலி இயக்கத்தில் பெண்களுக்கு தனிப்படை அமைப்பு வழங்கப்பட்டு அவர்கள் நேரடியாக போரில் ஈடுபட்டதை ஈழத்தமிழ் புதினங்களான ஆயுத எழுத்து, பயங்கரவாதி, உம்மத் ஆகிய புதினங்கள் உறுதிபடுத்துகின்றது. இது போன்ற புதினங்கள் பெண்போராளிகளின்

வரலாற்றை தனித்துவப்படுத்துகின்றது. இவ்வாய்வுக் கட்டுரை பெண் போராளிகள் உருவாதல், அவர்களின் போர்களப் பங்கு, போராளியாக மாறக் காரணங்கள், போருக்கு பிந்தைய நிலை ஆகியவற்றை ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** பெண் போராளிகள், ஆயுதப்போராட்டம், அகதி, போர்களப் பங்கு, தற்கொலைப் போராளிகள் (கரும்புலிகள்), துணைப் பணிகள்

***முன்னுரை:***

இலங்கைத்தீவில் நீண்டகாலமாகத் தொடர்ந்த இனவாத அரசியல் , சமூக அடக்குமுறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஈழத்தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கையை அடிப்படையாக மாற்றியமைத்தன. இந்த பின்னணியில் உருவான ஆயுதப்போராட்டம் ஆண்களின் பங்களிப்பை மட்டுமல்லாது , பெண்களின் செயல்பாடுகளையும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னிறுத்தியது. பாரம்பரியமாக வீட்டுக்குள் மட்டுமே அடக்கப்பட்டிருந்த பெண்கள் போர்ச்சூழலில் தங்களை ஒரு போராளியாக மாற்றிக்கொண்ட நிகழ்வு ஈழ வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. பெண்கள் போராளியாக மாறியதற்கு சமூக- அரசியல் ஒடுக்குமுறைகள் இன அடையாள நெருக்கடி, குடும்ப உறவுகளின் இழப்புகள், பாலியல் வன்முறை அச்சுறுத்தல்கள் , அகதி வாழ்க்கை போன்ற பல காரணங்கள் துணைபுரிந்தன. இவ்வாறான காரணங்கள் பெண்களை வெறும் பாதிக்கப்பட்டவர்களாக அல்லாமல் எதிர்ப்பின் சின்னங்களாகவும் மாற்றின. இந்தச் சமூக மாற்றங்களின் பிரதிபலிப்பாக ஈழத் தமிழ் புதினங்களில் பெண்போராளிகள் முக்கியமான கதாபாத்திரங்களாக உருவாக்கப்படுகிறார்கள். பெண்களின் தியாகம் , துணிச்சல், வேதனை அடையாளத் தேடல் போன்ற பல பரிணாமங்களில் சித்தரிக்கப்படுவதன் மூலம் போராட்டத்தின் மனித முகம் புதினத்தில் வெளிப்படுகிறது. ஆகவே ஈழப்போரில் பெண் போராளிகளின் பங்களிப்பு, போராளியாக மாறக் காரணங்களை ஆராய்வது , இதுபோன்ற செய்திகளை ஈழப்புதினங்களின் வழி பேச இவ்வாய்வுக்கட்டுரை முயல்கிறது.

***பெண்கள் போராளிகளாக உருவாதல் :***

1980 களிலிருந்து 2009 வரையான காலகட்டத்தில் ஒரு சுருங்கிய குடும்பவட்டத்திற்குள் அடக்கப்பட்டு இருந்த ஈழத்தமிழ் பெண்கள் பொதுவெளிக்குத் திரண்டு வந்தார்கள். சிங்கள அரசின் கொடுமைகளையும், இந்திய அமைதிப்படையின் கொடுமைகளையும், குடும்ப உறவுகளின் இழப்புகளையும் , பாலியல் வன்புனர்வுகளையும் தாங்கமுடியாத இளம் பெண்கள் போராளிகளாக மாறினார்கள். போராளிகளாக மாறின உடனேயே ஆயுதப்போராட்டத்திற்குச் செல்ல பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. மாறாக சண்டைக்களங்களில் நின்ற

ஆண்போராளிகளுக்கு உணவு கொண்டுசெல்லுதல், முதலுதவி பயிற்சி, குடிசைத்தொழில் முயற்சிகள், முன்பள்ளி அமைப்பு, கல்வி வளிர்ச்சி கழகம், விடுதலைப்புலி மாணவர் அமைப்பு ,புனர்வாழ்வு மையம் போன்ற சமூக வெளிகளில் பெண்கள் முதலில் பயன்படுத்தப்பட்டார்கள் என்பதை உம்மத் புதினம் வழி அறியலாம்.

***"போரில் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வை மீளக்கட்டி யெழுப்பவும் அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அவள் தனியொரு பெண்ணாக மேற்கொண்டு வரும் பிரயத்தனங்களை வனசுந்தர பண்டார விபரித்தார்" உம்மத் ப. 137***

என்ற வரிகளின் மூலம் உம்மத் புதினத்தில் பெண் போராளியான தவக்குள் பெண்களின் வாழ்வை சீரமைக்கும் மறுவாழ்வுமையத்தில் இணைந்து பணிபுரிந்ததை விளங்கமுடிகிறது. மேலும் கடவுள் பிசாசு நிலம் நூலில் ஆதிரனின் தாய் போராளியாக மாறியபோது முதலில் போராளிகளுக்கு உணவு சமைத்துக் கொடுத்து பின்பு இயக்கத்தின் செயல்பாடுகளையும் இயக்கத்தில் பயன்படுத்தப்படும் சொற்களின் பொருளினையும் நன்றாக அறிந்தவளாக நூல் பதிவிடுகின்றது. இதுமட்டுமல்லாமல் பெண்போராளிகள் போர்களத்தில் ஈடுபடுவதற்கு முன்பு குடும்பங்களைச் சந்தித்து குடும்பத்திலுள்ள பிரச்சனைளை கேட்டறிந்து அதனையும் தீர்த்துவைத்தார்கள் என்பதை தமிழ்பெண் பொதுவெளி எனும் நூல் குறிப்பிடுகின்றது.

***" விடுதலைப்புலிகள் அமைப்புடன் சேர்ந்து இயங்கி இளம்பெண்கள் குடும்பங்களில் பெண்கள் முகம் கொடுத்த பிரச்சனைகளயும் கவனித்தார்கள். தமக்கு பிரித்து வழங்கப்பட்ட இடங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று குடும்பத்திலுள்ள பெண்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்து வீட்டுப் பெண்களின் நம்பிக்கையை வளர்த்தார்கள்"*** தமிழ்பெண் பொதுவெளி ப.66 இவ்வாறாக இயக்க அமைப்புகளுடன் சேர்ந்து பல்வேறு வேலைகளை செய்து பின்பு முறையாக பயிற்சி எடுத்தபின்பே போர்களங்களுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் என்பதை ஈழப்புதினங்கள் பதிவிடுகின்றன. இதுபோன்ற நிலையினை தீபச் செல்வனின் பயங்கரவாதி புதினத்திலும் காணலாம்.

***" பயிற்சி முடித்த கமலினி வரிச்சீருடையைத் தரித்தாள். பாரதி என்ற பெயர் அவளுக்குச் சூட்டப்பட்டது. கழுத்தில் சைனைட் அணிந்தாள். சிறுவர் இல்லப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள்*** ". பயங்கரவாதி ப.119 இவ்வாறாக ஆபத்தான ஆயுதபோராட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்வதற்கு முன்பு பெண்போராளிகள் செய்த பணிகளை புதினங்களின் வழி அறியலாம்.

***பெண்போராளிகள் போரில் இணந்ததற்கான காரணங்கள்:***

வாழ்க்கையின் இயல்பான சுகதுக்கங்களை அனுபவிக்காமல் ஈழநாட்டின் விடுதலைக்காகப் பெண்கள் போராடினார்கள். போரினால் தங்களுக்கு மரணம் ஏற்பட்டாலும் எதிர்கால சந்ததிகள் சுதந்திரமாகவும் , உரிமைகள் மறுக்கப்படாமல் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்ற நினைப்புடன் போர்களங்களில் செயல்பட்டார்கள். பெண்கள் போராளியாக மாறுவதற்கு சமூக மற்றும் அரசியல் அடக்குமுறைகளும் விடுதலைபெறும் விருப்பவும் , குடும்ப அனுபவங்களும் , துயரங்களும் , சமூகத்தின் அழுத்தமும் போராட்டக் கலாச்சாரமும், தனிப்பட்ட அடையாளம் தேடும் முயற்சியும் காரணங்களாக அமைந்ததை ஈழத்தமிழ் புதினங்கள் விளக்குகின்றன.

***சமூக மற்றும் அரசியல் அடக்குமுறை:***

இலங்கைத் தமிழர்கள் நீண்டகாலம் அரசியல், மொழி, கல்வி , வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் புறக்கணிக்கப்பட்டார்கள். தமிழ் மக்கள் மீது நடந்த அடக்குமுறைகள், வன்முறைகள், இடப்பெயர்வுகள் ஆகியவை பெண்களை நேரடியாகப் பாதித்தன. இதனால் சில பெண்கள் தங்கள் சமூகத்தையும் குடும்பத்தையும் காப்பாற்றும் பாதுகாக்கும் எதிர்ப்புச் சக்தியாக போராட்டத்தில் இணைந்தார்கள்.

**“பதினைந்து இருபது வருடங்களுக்கு முந்தியது போன்ற வறுமையின் சாபப்பிடியிலதான் தற்போதும் தனது குடும்பநிலையிருக்கிறது என்பதை கடிதத்தில் கலா எழுதியிருந்தவற்றிலிருந்து விளங்கிக் கொண்டிருந்தாள்” உம்மத் ப.21** என்ற வரிகளில் போரினால் யோகாவின் குடும்பம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அன்றாடத் தேவையான உணவுகூட இல்லாத பரிதாப நிலையிலிருந்தும் வருமையிலிருந்தும் விடுவிக்கவும் பாதுகாப்பு கருதியும் இயக்கத்தில் போராளியாக இணைந்ததை உம்மத் புதினம் விவரிக்கின்றது.

***விடுதலை மற்றும் சமத்துவம் பெறும் விருப்பம்:***

போராட்டத்தில் தங்களை இணைத்துக்கொள்ளக் காரணம் வீட்டின் அடக்குமுறையிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணமும் ஆண்களுடன் சமமாக பங்களிக்க வேண்டும் என்ற நம்பிக்கையுமாக இருந்தது.

**“சுதந்திரத்தை விரும்புகிற பெண்ணாகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டாள் தெய்வானை யாரிலும் தங்கி நிற்காத வாழ்வை அவள் அவாவினாள்” உம்மத் ப.38**

என்ற வரிகளில் சுதந்திரத்தை விரும்பிய தெய்வானை போராளியாக மாறியதை அறியமுடிகிறது. இதே கருத்தை உம்மத் புதினமும் பதிவிடுகின்றது.

**"ஓ எல் பரீட்சையில் சித்தியடையாததினால் வீட்டுக்குச் சென்று மூன்று முரட்டு அண்ணன்களிடம் அடிபடுவதற்குப் பயந்துகொண்டு விளையாட்டாக அவள் இயக்கத்தில் சேர்ந்திருந்தாள். அவளுடன் படித்து பரீட்சையில் பெயிலான மேலும் சிலரும்"** ப.126

என்ற வரிகளில் விளையாட்டுத்தனமாக இளம் பெண்கள் போராளியாக உருவெடுத்ததை புதினம் பதிவிடுகின்றது.

***குடும்ப அனுபவங்களும் துயரங்களும்:***

பல பெண்கள் தங்கள் குடும்ப உருப்பினர்களை இழந்து பாலியல் வன்முறை, அகதிவாழ்க்கை அனுபவித்ததன் காரணமாக போராளியாக மாறினார்கள். துயரம், துன்பம், கோபம் ஆகியவை பெண்களை போராளிகளாக மாற்றியது என்பதை அப்பால் ஒரு நிலம் புதினம் விவரிக்கின்றது.

**"மேதா இயக்கத்துக்குப் போனாள். ஒரு நாள் அப்பாவை எதிர்பார்த்துக் களைத்ததன் காயம் தான் அவளைக் கொண்டுபோய் சேர்த்தது"** அப்பால் ஒரு நிலம் ப.51 என்ற வரிகளில் மேதாவின் அப்பா சிவகுமரன் சிங்கள அரசினால் படுகொலை செய்யப்பட்டார். இதன் பாதிப்பு மேதாவை போராளியாக மாற்றியதை புதினம் கூறுகின்றது. இதே கருத்தை பயங்கரவாதி புதினமும் பதிவிடுகின்றது.

**"என்ரை மகன் மூண்டு மாசத்துக்கு முதல் வீரச்சாவு"**

**"மற்றவரும் இயக்கத்திலை"**

**இவரையும் கிளாலியிலை ஆமி வெட்டிக் கொண்டு போட்டான்"**

**" நான் இயக்கத்திலை சேரப்போறேன்"** பயங்கரவாதி ப.118 என்ற வரிகளில் தன் குடும்ப உறுப்பினர்கள் இருவரைப்பறிகொடுத்த கமலினி தானும் இயக்கத்தில் சேர்ந்து பெண் போராளியாக செயல்பட விரும்புகிறாள். இவ்வாறு குடும்ப உறுப்பினர்களை இழந்த பெண்கள் போராளியாக மாறியதை புதினங்கள் பதிவு செய்கின்றது.

***ஈழப்போரில் பெண்களின் பங்களிப்பு:***

ஈழப்போரில் பெண்போராளிகளின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். தமிழீழ விடுதலைப்புலி போன்ற அமைப்பில் பெண்கள் நேரடியாகப் போரில் ஈடுபட்டது உலகிலேயே ஒரு சில விடுதலைப் போராட்டங்களில் காணப்பட்ட அம்சம் ஆகும். பெண்களின் பங்களிப்புகள் பல வடிவங்களில் இருந்ததை புதினங்கள் பதிவிடுகின்றது. போர்களப்பங்கு , தற்கொலைப் போராளிகள் , துணைப்பணிகள்,

அரசியல் மற்றும் சமூகப்பங்களிப்பு , கவிஞர் மற்றும் எழுத்தாளர்களாக பெண்கள் பங்காற்றினார்கள்.

***போர்களப் பங்கு:***

பெண் போராளிகள் ஆயுதம் ஏந்தி முன்னணிப் போர்க்களங்களில் சண்டையிட்டார்கள். எதிரியின் தாக்குதல்களை முறியடிப்பதிலும் முக்கிய இராணுவ நடவடிக்கைகளிலும் பெண்போராளிகள் தங்களின் வீரத்தை வெளிப்படுத்திய விதத்தை கடவுள் பிசாசு நிலம் நூல் வெளிப்படுத்துகின்றது.

**“எறிகணைகளும் குண்டுகளின் பொழிவுக்கும் நடுவில் நின்று போராடும் இந்த யுத்ததில் வதைப்படும் மானுடத்தின் மீட்பர்களில் மானுடத்தின் மீட்பர்களில் நானுமொருத்தி”**

**“இனிவருகிற சண்டையில் நாம் மீட்கப்போகிற ஒவ்வோர் அடி மண்ணும் எங்களுடைய பிள்ளைகளுக்கு நாங்கள் அளிக்கும் விடுதலையின் உத்தரவாதம்”** கடவுள் பிசாசு நிலம் ப.323 என்ற வரிகளின் மூலம் இளவெயினி போன்ற பெண்போராளிகள் தங்களின் உயிரைப் பணையம் வைத்து ஈழமக்களுக்காகப் போராடினார்கள் என்பதை உணரமுடிகின்றது.

**தற்கொலைப் போராளிகள் (கரும்புலிகள்):**

புலிகளின் தற்கொலைப் பிரிவான கரும்புலிகள் அணியிலும் பெண்போராளிகள் முக்கியப் பங்கு வகித்தார்கள் என்பதை ஆயுத எழுத்து புதினம் உறுதிபடுத்துகின்றது.

**‘‘எங்கடை ஊர் மல்வத்தைச் சோனகரும் சிங்களரும் எங்கடை ஊருக்கே புகுந்து அட்டகாசம் பண்ணி வெட்டி கொத்தி எல்லரையும் திரத்திட்டாங்கள் நாங்களும் அகதியா வந்து வீரமுனை சித்தி விநாயகர் கோயில்லை குடியேறியிருந்தம். ஆனால், அவங்கள் அங்கேயும் புகுந்து அகதியா இருந்த சனங்களை வெட்டி கொத்தி கொலை செஞ்சாங்கள். அதிலை என்டை அம்மாவும் செத்துப் போனா. அதுதான் அவங்களுக்கு ஏதாவது செய்ய வேணும் எண்டு இயக்கத்திலை சேர்ந்தன். அதுவும் சும்ம சண்டையிலை செத்துப்போக விருப்பம் இல்லை. சாகிறதெண்டால் ஏதாவது பெரிசா செய்திட்டு சாகவேணும் அதுதான் கரும்புலிக்குப் போக விரும்பினான்’’.** ஆயுத எழுத்து ப.280 என்ற வரிகளின் மூலம் ரெஜினா போன்ற பெண்கள் சிங்களவர்களை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் கரும்புலிகளாக செயல்பட்டார்கள் என்பதை புதினம் கூறுகின்றது.

**துணைப் பணிகள்:**

சண்டை நடவடிக்கைகள் தவிர மருத்துவப்பிரிவு , நிர்வாகப் பணிகள், உளவுத்துறை மற்றும் கடற்புலிகளின் பிரிவுகளிலும் பெண்கள் பணியாற்றினார்கள். போர்க்களங்களில் மட்டுமல்லாமல் மருத்துவப்போராளிகளாகவும் செயல்பட்டதை பயங்கரவாதி புதினம் பதிவிடுகின்றது.

"**சத்திர சிகிச்சை செய்து பீஸ் துண்டை அப்படியே நீக்கவும் வாய்ப்பிருக்குது……**"

"**குமரன் ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்லை….. சரிதானே…….**"

"**போராளி மருத்துவர் தமிழவள் அவன் தலையைத் தடவினாள்…**" பயங்கரவாதி ப.195 என்ற வரிகளின் மூலம் பெண்போராளி மருத்துவர்கள் ஈழப்போருக்காக தங்களின் பங்களிப்பையும் செலுத்தினார்கள் என்பதை புதினம் உருதிபடுத்துகின்றது. மேலும் பெண்கள் பணிபுரிந்த பிரிவுகளை தமிழ்பெண் பொதுவெளி நூல் விவரிக்கிறது.

"**பெண்கள் கடற்புலிப் பிரிவு, பெண்கள் இராணுவ வேவுப் பிரிவு ,பெண்கள் கண்ணிவெடிப்பிரிவு, மற்றும் பெண்கள் கரும்புலிப் பிரிவு என்று இவை மேலும் வளர்ந்தன. ஆயுதப் பயிற்சியால் பெங்களுக்கு கிடைத்த நன்மைகளை மீனா விளக்குகிறார்,**

"**கையில் ஆயுதமும் அதைக்கையாளும் தன்னம்பிக்கையும் இருக்கும்போது எம்மால் எதையும் சாதிக்கலாம் என்ற துணிவு பிறக்கும் . வட்டுவாகலில் மே 2009 இல் நின்ற போதே நிராயுத பாணியாக இருப்பதன் அர்த்தத்தை உணர்ந்தேன்**" தமிழ்பெண் பொதுவெளி ப.113 என்ற வரிகளில் பெண்கள் பணியாற்றின பிரிவுகளை நூல் பதிவிடுகின்றது. போர்க்களத்தில் பெண்கள் கற்றுக்கொண்ட ஒரு முக்கியமான பாடம் அவர்கள் மனது வைத்தால் ஆண்களால் செய்யக்கூடிய எதையும் பெண்களாலும் செய்யமுடியும் என்பதே. தமது உடல் வலிமையில் பெண்களுக்கு உருவான தன்னம்பிக்கை அவர்களின் மனதைரியத்திலும் அறிவாற்றலிலும் தன்னம்பிக்கையை வளர்த்து போர்களங்களில் வீராங்கனைகளாக செயல்பட வைத்ததை ஈழப்புதினங்கள் பதிவிடுகின்றன.

**போருக்குப்பின் பெண் போராளிகளின் வாழ்க்கை:**

ஈழப்போரினால் ஆண்களைவிட அதிகமாக உடளலவிலும் மனதளவிலும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்போராளிகளாக் காணப்பட்டார்கள். போருக்குப் பின் இவர்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க தினமும் போராடினார்கள். குறிப்பாக திருமணமாகாத நிலை, வேலைவாய்ப்பின்மை, உடலில் ஏற்பட்ட ஊனம் , போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டார்கள். இளம் பெண்களில் அதிகமான பெண்கள் மாற்றுத்திறனாளியாக

கண்களை, கால்களை இழந்து மிக பரிதாப நிலையிலிருந்தார்கள்.அதிகமானவர்கள் தங்களுக்கென அடையாள அட்டை இல்லாமல் இருந்தார்கள்.இத்தனை துன்பங்களை சந்தித்தபின்பும் வாழ்வதற்காக இவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை உம்மத் புதினம் வெளிப்படுத்துகிறது.

**“இளம் பெண்களில் அதிகம்பேர் போரில் மாற்றுத்திறனாலிகளாகிக் கண்களை கைகளை கால்களை இழந்து மிகப் பரிதாப நிலையிலிருந்தனர். அவர்களில் போராளிப்பெண்களும் காணப்பட்டனர். அதிகமானோர் அடையாள அட்டை இல்லாதிருந்தனர்”.** உம்மத் ப.73

‘‘**போராட்டத்தில் ஈடுபட்டனென்டு தெரிந்ததும் என்டை சனம் தந்த வேலையைக் கூடப் பறிச்சிட்டினம்**’’ உம்மத் ப.96

‘‘**இயக்கத்தில இருந்த பெட்டையின்ர குடும்பம் என்டு தெரிஞ்சால் ஆரு மாப்பிள்ளை தரப்போயினம்….. தற்செயலாக அவையள் கண்டிச்சினம் என்டா ஆருமில்லாத பெட்டை பாவமெண்டு வீட்டில வச்சிருக்கம் எண்டுதான் சொல்லனும் விளங்கிச்சே”** உம்மத் ப. 184 என்ற வரிகளின் மூலம் பெண் போராளிகளுக்கு வேலை, திருமணம் போன்றவை சவால் நிறைந்த வாழ்க்கையாகவே காணப்பட்டதை உணரமுடிகிறது. ஈழத்துச் சூழலில் போருக்குப் பின்னரான பெண்களின் எதிர்காலம் போரில் போரில் பங்கேற்ற பெண்களின் இயல்பு வாழ்வு என்பன சவால், ஏமாற்றம் , துயரம், அவமானம், குற்றவுணர்வுகளின் கலவையாகத் தொடர்கின்ற நிர்பந்த சூழலே இன்னமும் நிலவுகிறது என்பதை உம்மத் புதினம் பதிவிடுகின்றது.

**முடிவுரை:**

ஈழப்போரில் பெண் போராளிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்துல் முக்கிய அங்கமாக இருந்திருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பு வெறுமனே சண்டையிடுவததோடு நின்றுவிடாமல் அவர்களுக்கு ஒரு புதிய அடையாளத்தை போராளிகளாக மாறியபோது பெறுகிறார்கள். போராளிப் பெண்கள் உடல் மொழியாலும் தங்களின் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் வழிகளில் தனித்துவமாக இருக்கிறார்கள். மனமுடைந்து நிற்கும் ஏனைய பெண்களுக்கு ஊக்கம் கொடுப்பது மட்டுமல்லாமல் பல பெண்கள் தங்கள் தந்தை, சகோதரர், கணவர் , போன்றவர்களை போரில் இழந்தார்கள். அகதி வாழ்க்கை, பாதுகாப்பற்ற நிலை, பாலியல் வன்முறை போன்ற அனுபவங்கள் அவர்களின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. இந்த துயரங்கள் பழிவாங்கும் உணர்வாக மட்டுமல்லாது நீதியும் பாதுகாப்பும் பெறும் போராட்டமாகவும் மாறின. இவ்வாறு தனிப்பட்ட அனுபவங்கள் பெண்களை போராளியாக மாற்ற முக்கிய உந்துதலாக அமைந்தன. ஆண்களுக்கு இணையாக

போராளிப்பெண்களும் களமுனையில் செயல்பட்டார்கள் என்பதை மேற்கண்ட கட்டுரை உறுதிபடுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்:**


1. ஆயுத எழுத்து -சாத்திரி -2013 - திலீபன் பதிப்பகம் சென்னை
2. பயங்கரவாதி — தீபச்செல்வன் - டிசம்பர் 2021 - டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் -சென்னை 600 078
3. உம்மத் — ஸர்மிளா ஸெய்யத் -டிசம்பர் 2013 -காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் - நாகர்கோவில் 629001
4. அப்பால் ஒரு நிலம் - குணா கவியழகன்- ஜனவரி 2016 - அகல் பப்ளிகேஷன்ஸ்
5. கடவுள் பிசாசு நிலம் — அகர முதல்வன் -டிசம்பர் 2022 -விகடன் பிரசுரம் -சென்னை 600 002
6. தமிழ்பெண் பொதுவெளி தமிழீழத்தில் அதன் வளர்ச்சியும் வீழ்ச்சியும் - ந. மாலதி - அக்டோபர் 2021 - நிமிர் பதிப்பகம் - சென்னை 600018

*References:*

1. Aayutha Ezuththu — saththiri- 2013- thileepan pathippagam — Chennai
2. Bayangaravaathi —Deebachelvan — December 2023 — Chennai 600 078
3. ummat — sharmila seyyid —december 2013 —nagercoil — 629001
4. Appaal oru Nilam — Kuna Kaviyalakan- January 2016- Akal publication
5. kadavul pisasu nilam —akara muthalvan — December 2022 — Chennai 600 002
6. Tamilpen Pothuveli- Tamileelaththil athan valarchiyum veezhchiyum- n. malathi October — 2021 —Chennai 600 0018

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com